**செய்தி வெளியீடு எண்:148** **நாள்:23.02.2021**

# <u>செய்தி வெளியீடு</u>

2019 நவம்பர் 06–ஆம் நாளிட்ட மைய அரசிதழில் அறிவித்து (2019 நவம்பர் 05–ஆம் நாளிட்ட அறிவிக்கை எண். G.S.R.821 (E)), வெளியிடப்பட்ட 2019–ஆம் ஆண்டு சான்றுறுதி அலுவலர்கள் (மூன்றாம் திருத்தம்) விதிகளின் படி, சான்றுறுதி அலுவலர்களின் தொழிற்சான்றிதழை புதுப்பித்தலுக்கானதொரு விண்ணப்பமானது, அதன் காலக்கெடுவானது முடிவடையும் தேதிக்கு ஆறு மாத காலத்திற்கு முன்னதாக, உரிய அரசிடம் படிவம் XVI- ல் **<u>இணைய வழியில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.</u>**

சான்றுறுதி அலுவலரின் நியமனம், தொழிற் சான்றிதழ் புதுப்பித்தல், தொழிலாற்றும் இடத்தின் விரிவாக்கம், தொழிற் சான்றிதழுக்கான நகல் வழங்குவதற்கான விண்ணப்பத்தினையும் மற்றும் ஆண்டு விவர அறிக்கையினை சமர்ப்பிக்கும் நோக்கத்திற்காக இணையதள முகவரி ஒன்று தமிழ்நாடு அரசால் தொடங்கப்பட்டுள்ளது. அவ்விணையதளத்தினை **"tnnotary.tn.gov.in"** என்ற இணையதள முகவரியில் (URL) தொடர்பு கொள்ளலாம். தமிழ்நாடு அரசால் நியமனம் செய்யப்பட்ட சான்றுறுதி அலுவலர்கள், தங்களது தொழிற் சான்றிதழ் புதுப்பித்தல், தொழிலாற்றும் இடத்தின் விரிவாக்கம், தொழிற் சான்றிதழ் நகல் வழங்குவதற்கான விண்ணப்பம் மற்றும் ஆண்டு விவர அறிக்கை சமர்ப்பித்தல் ஆகியவற்றினை **tnnotary.tn.gov.in** என்ற இணையதள முகவரி வாயிலாக மட்டுமே சமர்ப்பித்தல் வேண்டும்.

சான்றுறுதி அலுவலர்களின் தொழிற் சான்றிதழ் புதுப்பித்தல் உள்ளடங்களான மேற்கூறப்பட்ட நோக்கங்களுக்காக, 1956–ஆம் ஆண்டு சான்றுறுதி அலுவலர்கள் விதிகளின் கீழ், விண்ணப்பங்கள் **2021 மார்ச் 10–ஆம் தேதி** முதல் இணைய வழியல்லாத முறையில் (offline) ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**